‘வந்தே மாதரத்துக்கான’ சட்ட அங்கீகாரத்துக்கு எதிரான மனு: மத்திய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, செப். 22: தேசியப் பாடலான வந்தே மாதரத்துக்கு வழங்கப்படும் சட்ட அங்கீகாரத்தைஎதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீது பதிலளிக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது.

மனசாட்சி அடிப்படையில் தேசிய கீதத்தை பாட மறுத்த குழந்தைகளுக்கு சட்டரீதியாகப் பாதுகாப்பு வழங்கி கடந்த 1986-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சுட்டிக்காட்டி கர்நாடக இசைக் கலைஞரும் எழுத்தாளருமான டி.எம்.கிருஷ்ணா மனு தாக்கல் செய்தார்.

அதில், வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களையும் கட்டாயம் பாட வேண்டும் என்ற சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த அவர், கடைசி 4 சரணங்கள் நாட்டின் மதச்சார்பற்ற தன்மையை மீறும் வகையில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

தேசியப் பாடல் அல்லது தேசிய கீதம் பாடப்படும்போது வேண்டுமென்றே இடையூறு ஏற்படுத்துபவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கும் விதமாக 2026-இல் திருத்தப்பட்ட தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்புச் சட்டம்,1971 பிரிவு 3, 2026, ஜனவரி 28, ஜூலை 9-ஆம் தேதி வெளியான மத்திய உள்துறை அமைச்சக ஆணை ஆகியவற்றுக்கு எதிரான இந்த மனுவை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு செவ்வாய்க்கிழமை விசாரித்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் முரளீதர் வாதிடுகையில், ‘வந்தே மாதரத்தின் அனைத்துச் சரணங்களையும் பாடுவது கட்டாயம் என்ற சட்டத் திருத்தத்தில் தேசியப் பாடலுக்கான வரையறை தனியாகக் குறிப்பிடவில்லை. எந்தச் சரணம் தேசியப் பாடலாக கருதப்படும் என்ற விளக்கமும் கூறப்படவில்லை. தேசிய அளவில் உரிய ஆலோசனை மேற்கொள்ளாமல் அவசரமாக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்த ஆணை அரசிதழில் வெளியிடப்படவில்லை. மாறாக, நிர்வாக ரீதியான அறிவுறுத்தல்கள் மூலமாக வந்தே மாதரம் குறித்த முந்தைய புரிதலை அரசு மாற்றியுள்ளது’ என்றார்.

நக்ஸல் சிந்தனை-கடும் வார்த்தை மோதல்: முரளீதர் வாதத்தைத் தொடர்ந்து மத்திய அரசுத் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் துஷார் மேத்தா கூறுகையில், ‘மதச்சார்பு நிலை குறித்து மனுதாரருக்கு குறுகிய மனப்பான்மை இருக்கக் கூடாது. நக்ஸல்களின் சிந்தனைக்கேற்ப சட்ட நடைமுறைகளை மேற்கொள்ள முடியாது’ என்றார்.

இதற்கு முரளீதர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

மத்திய அரசிடம் எதிர்பார்ப்பு: இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் அமர்வு, ‘கடந்த 1986-இல் பிஜோ வழக்கில் சில வழிமுறைகளை உச்சநீதிமன்றம் வகுத்ததுபோல் தற்போது மத்திய அரசும் வகுக்கும் என நம்புகிறோம். அதேபோல் வந்தே மாதரம் பாடலின் எந்தெந்த சரணங்கள் தேசியப் பாடல் என உச்சநீதிமன்றம் நிர்ணயிக்க முடியாது.

ஆனால், மனசாட்சிப்படி வந்தே மாதரம் பாடலை பாடமறுப்பவரின் உரிமைகள் சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்படுகிறதா? என ஆய்வு செய்ய உச்சநீதிமன்றத்துக்கு உரிமை உள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 26 மீறப்பட்டதாக உணர்பவர்களோ அல்லது மனசாட்சிப்படி மறுப்பு தெரிவிப்பவர்களோ எவ்வித தண்டனைக்கும் உள்ளாக்கப்பட மாட்டார்கள்’ எனத் தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து, இந்த மனு தொடர்பாக மத்திய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

ஹரியாணாவில் விவசாயிகள் சாலை மறியல்

காவல் துறை தடியடி, கண்ணீர்ப் புகை குண்டு வீச்சு

ஷாகாபாத், செப். 22: ஹரியாணாவில் நெல் கொள்முதலை உடனடியாகத் தொடங்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை போலீஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகை குண்டுகளையும் வீசியும் கலைத்தனர்.

பாரதிய கிஸான் சங்கம் (சாருனி) சார்பில் ஷாகாதாபாதில் செவ்வாய்க்கிழமை இந்த சாலை மறியல் நடந்தது. தில்லி-சண்டீகர் இடையிலான சாலையில் விவசாய சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சாலையின் இரு பக்கங்களிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த காவல் துறையினர் விவசாயிகளிடம் பேசி அவர்களை சாலையில் இருந்து வெளியேற்ற முயன்றனர். ஆனால், விவசாயிகள் அங்கிருந்து வெளியேற மறுத்தனர்.

இதையடுத்து, காவல் துறையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் அவர்களை கலைந்து போகச் செய்தனர். சங்கத்தின் தலைவர் குர்னாம் சௌதரி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

ஹரியாணாவில் வழக்கமாக அக்டோபர் 1-ஆம் தேதி நெல் கொள்முதல் தொடங்கும். கடந்த ஆண்டு செப்டம்பர் 22-ஆம் தேதி தொடங்கப்பட்டது. அதையே இந்த ஆண்டும் தொடர விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஐ.நா.பொதுச் சபையில் பன்முகத்தன்மைக்கான முதல் உச்சிமாநாடு

இணைத் தலைமையாக செயல்பட்ட இந்தியா

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்.

நியூயார்க், செப்.22: ஐ.நா.பொதுச் சபையில் நடைபெற்ற பன்முகத்தன்மைக்கான முதல் உச்சிமாநாட்டில் இணைத் தலைமையாக இந்தியா செயல்பட்டது.

ஐ.நா.பொதுச் சபையின் 81-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்க இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா சென்றார்.

இந்நிலையில், ஐ.நா.பொதுச் சபையில் திங்கள்கிழமை முதல்முறையாக நடைபெற்ற ‘பன்முகத்தன்மை, சர்வதேச சட்டம், அமைதி மற்றும் வளமைக்கான (பி4எம்) கூட்டாளிகள்’ என்ற உச்சிமாநாட்டில் ஆஸ்திரேலியா, பார்படோஸ், பிரேஸில், கனடா, கென்யா ஆகிய நாட்டின் பிரதிநிதிகள் மற்றும் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் ஆன்டனியோ கோஸ்டா ஆகியோருடன் இணைத் தலைவராகச் செயல்பட்டார்.

அப்போது ஜெய்சங்கர் பேசியதாவது: இந்த மாநாட்டுக்கு இணைத் தலைமையாக இந்தியா இருப்பதுமகிழ்ச்சியளிக்கிறது. சர்வதேச புவிஅரசியலில் பல்வேறு சிக்கல்கள் நிலவி வரும் நிலையில் நாம் இங்கு கூடியுள்ளோம்.

பல பத்தாண்டுகளாக உலகம் ஒரு மறுசீரமைப்பைக் கண்டு வருகிறது. இது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான பரிணாம வளர்ச்சியாகவே பார்க்கப்படுகிறது.

இருப்பினும், கடும் போட்டி, புவிஅரசியல் பிரச்னைகள் மற்றும் மோதல்கள் இவற்றின் போக்கை முற்றிலும் மாற்றிவிட்டது. இதை கண்டுகொள்ளாமல் நகர்ந்தால் வரும் நாள்களில் சர்வதேச ஒத்துழைப்பு கேள்விக்குறியாகிவிடும். இந்தத் தருணத்தில்தான் பன்முகத்தன்மையை வலுவாக நிலைநிறுத்த வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

4 முக்கியப் பிரச்னைகள்: எரிபொருள், உணவு, உரம் மற்றும் நிதி ஆகிய நான்கு பிரச்னைகளுக்குத் தீர்வு காண வேண்டியது அவசியம். மேற்கூறிய நான்குக்கும் ஆதிக்கம் மற்றும் இடையூறுகளால் அச்சுறுத்தல் ஏற்படும்போது மாற்று வழிகளைக் கண்டறிய வேண்டும்.

இதுபோன்ற சூழலில் ஒரே மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்ட நாடுகள் ஒன்றிணைய வேண்டும்.

அப்போதுதான் அமைதி மற்றும் சர்வதேச பாதுகாப்பு, பருவநிலை நடவடிக்கை, பருவநிலை நீதி, வளரும் தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பாட்டு நிதி, பயங்கரவாத தடுப்பு, விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துவது மற்றும் பேரிடர் மீள்தன்மையை உறுதிபடுத்துவது, பெருந்தொற்று போன்ற சிக்கல்களையும் ஒன்றாக எதிர்கொள்ள முடியும் என்றார்.

இருதரப்பு ஆலோசனை: ஐ.நா.பொதுச் சபை அமர்வில் பங்கேற்க வந்த பன்னாட்டு வெளியுறவு அமைச்சர்களை ஜெய்சங்கர் திங்கள்கிழமை சந்தித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், ‘பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஜீன் நோயல் பாரோவை சந்தித்ததில் மகிழ்ச்சி. அவருடன் உக்ரைன் போர் மற்றும் வளைகுடா மோதல் குறித்து விவாதித்தேன். ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் உள்பட பல்வேறு பிராந்திய, உலகளாவிய பிரச்னைகள் குறித்து இருவரும் ஆலோசித்தோம். அண்மையில் மேற்கொண்ட உக்ரைன் பயணத்தைத் தொடர்ந்து தற்போது மீண்டும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹாவை நியூயார்க்கில் சந்தித்ததில் மகிழ்ச்சி.

மால்டோவா வெளியுறவு அமைச்சர் மிஹாய் பாப்சோயுடன் அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது, உக்ரைன் விவகாரம் குறித்து ஆலோசித்தேன்.

ஸ்விட்சர்லாந்து வெளியுறவு அமைச்சர் இக்னாசியா காசிஸுடன் இந்தியா-இஎஃப்டிஏ வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்துப் பேசினேன்’ எனக் குறிப்பிட்டார்.

வி4 நாடுகளுடனான சந்திப்பு வரலாற்று மைல்கல்: ஹங்கேரி, ஸ்லோவோக்கியா, போலந்து, செக் குடியரசு (விசெக்ராட் குழு) ஆகிய 4 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் முதல்முறையாக ஜெய்சங்கர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், ‘வி4 நாடுகளின் அமைச்சர்களை சந்தித்தது வரலாற்று மைல்கல் நிகழ்வு.

ஐரோப்பியஒன்றியத்துடனான இந்திய நட்புறவு மேலும் விரிவடைந்து வருகிறது.

தொழில்நுட்பம், புத்தாக்கம், பாதுகாப்பு, விண்வெளி, தொலைத்தொடர்பு உள்ளிட்ட துறைகளில் வி4 நாடுகள் மற்றும் இந்தியா இடையேயான ஒத்துழைப்பு வரும் நாள்களில் வலுப்படும்.

ஆண்டுதோறும் வி4 நாடுகள் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு, வணிக கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது’ என்றார்.

தமிழகத்தில் பிகார் தொழிலாளர்கள் குறித்து விரைவில் கணக்கெடுப்பு

பிகார் கூடுதல் தலைமைச் செயலர்

கே. செந்தில்குமார்

பாட்னா, செப். 22: தமிழகத்தில் பிகார் தொழிலாளர்கள் குறித்து விரைவில் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாக அந்த மாநிலத்தின் தொழிலாளர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் நலத் துறை கூடுதல் செயலர் கே. செந்தில்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் பாட்னாவில் செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டி: தமிழகம், மகாராஷ்டிரம், கர்நாடகம், குஜராத் உள்ளிட்ட 12 மாநிலங்களில் பிகார் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

ஆனால், எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு பிகார் தொழிலாளர் வேலை செய்கின்றனர் என்ற துல்லிய புள்ளிவிவரங்கள் இல்லை. இதை சரி செய்யும் வகையில் பிகாரைச் சேர்ந்தவர்கள் வேலை செய்யும் 12 மாநிலங்களிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

தொழிலாளர் உதவி மையம்: தமிழகத்திலும் இந்தக் கணக்கெடுப்பு தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடந்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் திருப்பூர், சென்னை, கோவை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பிகார் தொழிலாளர்கள் அதிக அளவில் பணிபுரிகின்றனர். கோவையில் பிகார் அரசின் சார்பில் தொழிலாளர் உதவி மையம் மூன்று மாதங்களில் திறக்கப்பட இருக்கிறது. பிகார் அரசு ஊழியர்கள் அங்கு பணியில் இருப்பார்கள். அவர்கள் தமிழக அரசுடன் இணைந்து பிகார் தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளும், அரசு தொழிலாளர் நலத் திட்ட கல்வி உதவிகளும் கிடைக்கும் வகையில் செயல்படுவார்கள்.

ஏற்கெனவே இந்தத் தொழிலாளர் உதவி மையம் பிகார் அரசின் சார்பில் கர்நாடக மாநிலம் பெங்களூரில் அண்மையில் திறக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பிகாரில்தொழில்வாய்ப்பு: வேலைவாய்ப்பு தேடி பிகார் இளைஞர்கள் வெளிமாநிலங்களுக்குச் செல்வதை தடுக்கும் வகையில் நீண்டகால திட்டங்களையும், தொழில் வாய்ப்புகளையும் பிகார் மாநில அரசு உருவாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக சிமெண்ட் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள் உள்பட பல்வேறு தொழிற்சாலைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பிகாரில் தொழிலாளர் பற்றாக் குறை: பிகாரில் இருந்து அதிக அளவில் தொழிலாளர்கள் வெளிமாநிலங்களுக்குச் செல்வதால் சொந்த மாநிலத்தில் (பிகார்) வேளாண்மை துறையிலும், கட்டுமானத் துறையிலும் தொழிலாளர் பற்றாக்குறை அண்மைக்காலமாக ஏற்பட்டு வருகிறது. இது அத்துறையில் இன்னும் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் பெரிய பாதிப்பு ஏற்படும் முன் இந்த நிலை மாற வேண்டும்.

மதுவிலக்கு சாதனை: நாட்டிலேயே அதிகம் இளைஞர்கள் உள்ள மாநிலமாக பிகார் இருக்கிறது. பிகாரில் கடந்த 2016-ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் நிதீஷ்குமார் பெண்களின் கோரிக்கையை ஏற்று மிகவும் துணிச்சலாக மதுவிலக்கை அமல்படுத்தினார். இதனால் பிகார் அரசுக்கு அப்போது பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதை அரசு பல்வேறு வகைகளில் ஈடு கட்டியது. மத்திய அரசிடம் கூடுதல் நிதியைப் பெற்று சமாளித்தது.

மதுவிலக்கை அமல்படுத்தியதின் மூலம் மாநிலத்தில் சட்டம்- ஒழுங்கு மேம்பட்டுள்ளது. சாலை விபத்துகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது என்றார் அவர்.

மும்பை ஐஐடி மாணவர் தற்கொலை சம்பவம்: சிசிடிவி காட்சிகளை ஆராய்ந்த காவல் துறை

மும்பை,செப்22: மும்பை ஐஐடி கல்வி நிறுவனத்தில் மாணவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பாக, கண்காணிப்பு கேமரா (சிசிடிவி) காட்சிகளை ஆராய்ந்து காவல் துறை தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் மும்பை ஐஐடி கல்வி நிறுவனத்தில் சாஹில் வாகோடே என்ற பட்டியலின மாணவர் பிடெக் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். கடந்த செப்.18-ஆம் தேதி தேர்வறையில் அவர் கைப்பேசியுடன் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் தேர்வின்போது வினாக்களுக்கு இணையத்தில் இருந்து பதிலை பெற, அவர் செயற்கை நுண்ணறிவு தளமான சாட்ஜிபிடியில் வினாத்தாளை பதிவேற்றம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து, சாஹில் வாகோடே தனது விடுதி அறையில் தற்கொலை செய்து கொண்டார்.

எனினும் அந்தக் கல்வி நிறுவனத்தில் அவர் ஜாதி ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளானதாக காவல் துறையிடம் சாஹிலின் பெற்றோர் புகார் அளித்தனர். அந்தப்புகாரின் அடிப்படையில் தற்கொலைக்கு தூண்டுதல், பட்டியலினத்தவர், பழங்குடியினர் (எஸ்சி/ எஸ்டி) வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், காவல் துறை வழக்குப் பதிவு செய்தது. இதைத் தொடர்ந்து அந்தக் கல்வி நிறுவனத்தின் நிர்வாக விவகாரங்களுக்கான டீன் பொறுப்பில் இருந்து சூர்யநாராயண தூலா நீக்கப்பட்டார். இந்த வழக்கை விசாரித்து வரும் மும்பை காவல் துறையின் குற்றப் பிரிவு, செப்.18-ஆம் தேதி தேர்வறை மற்றும் விடுதி அறையின் கண்காணிப்பு கேமரா காட்சிகளை, தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

மாண்புமிகு சென்னை, கடன் மீட்பு தீர்ப்பாயம்-III முன்னிலையில்
O.A. எண்.1185 / 2025
M/s. கனரா வங்கி, [IFSC Code-CNRB0005218]
படப்பை கிளை, பிரதிநிதியாக அதன் கிளை மேலாளர்,
எண்.20, ஹசியார் நகர், படப்பை, காஞ்சிபுரம்-601301.
... மனுதாரர்

எதிர்

1. M/s.Sri Anandha Jothi Hardwares, (கடன்தாரர்) [PAN.No.AIBPV6317N] பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. T. விக்னேஷ், எண்.6/507, வாலாஜாபாத் பிரதான சாலை, படப்பை, காஞ்சிபுரம்-601301.
2. திரு. T. விக்னேஷ், (இணை கடன்தாரர்) த/பெ திரு.தீப கணேஷ், 2வது குறுக்கு, காளி நகர், ஆதனஞ்சேரி, படப்பை, காஞ்சிபுரம்-601301.
3. திரு. K. சுரேஷ் (ஜாமீன்தாரர்) த/பெ திரு. காசிலிங்கம் எண்.7, PMD காம்ப்ளக்ஸ், வண்டலூர், வாலாஜாபாத் சாலை, படப்பை, காஞ்சிபுரம் - 601301.
- பிரதிவாதிகள்

பத்திரிக்கை வெளியீடு

மேற்கண்ட அசல் விண்ணப்பம் (O.A.) தொடர்பான அனைத்து முக்கியக் கேள்விகளுக்கும் பதிலளிக்க நீங்கள் நேரடியாகவோ அல்லது உங்களால் முறையாக அறிவுறுத்தப் பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ 30.09.2026 அன்று காலை 10.30 மணிக்கு உரிமைக்கோரலுக்குப் பதிலளிக்குமாறு D1 முதல் D3 வரையிலான நீங்கள் மாண்புமிகு DRT-III, சென்னை அவர்கள் முன் ஆஜராகுமாறு. தீர்ப்பாயத்தினால் உத்தரவிடப்படுகிறீர்கள். அவ்வாறு நீங்கள் ஆஜராகத் தவறினால், மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பத்தின் வழக்கானது நீங்கள் இல்லாமலேயே சட்டப்படி விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

B. விவேகானந்
விண்ணப்பதாரர் வங்கியின் வழக்கறிஞர்

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

மாண்புமிகு கடன் மீட்புத் தீர்ப்பாயம் –I, சென்னைக்கு முன்பாக
(சாஸ்திரி பவன், கூடுதல் கட்டிடம், 7வது தளம், ஹேடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 006)
IA எண். 185/2025
in
OA எண். 02/2023
பாரத ஸ்டேட் வங்கி,
ஒடுக்கப்பட்ட சொத்து நிர்வாகக் கிளை,
செஞ்சிலுவை கட்டிடங்கள், மாண்டியத் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
பிரதிநிதியாக அதன் உதவி பொது மேலாளர் & மற்றவர்கள்
...மனுதாரர்கள்

-எதிர்-

1. திருமதி.R.அம்பிகா, க/பெ.V.ராஜேந்திரன், எண்.37, 6வது தெரு, திருமால் நகர், விநாயகபுரம், கொளத்தூர், சென்னை-600 099
2. திருமதி.M.வைதேகி, க/பெ.D.மனோகரன், எண்.17, கலெக்டர் நகர் 1வது தெரு, மதனங்குப்பம், சென்னை-600099
3. திரு.D.மனோகரன், த/பெ.தனசேகரன், எண்.17, கலெக்டர் நகர் 1வது தெரு, மதனங்குப்பம், சென்னை-600099
...பிரதிவாதிகள்

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர்களான பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பிறர், சென்னை DRT-I முன்னிலையில் O.A எண் 2/2023-ஐ தாக்கல் செய்திருந்தனர் என்பதையும், அந்த O.A-வில், I.A எண் 185/2025இல் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர் என்பதையும் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். அந்த மனு, நீங்கள் ஆஜராவதற்காக 10.11.2026 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது. நீங்கள் ஆஜராகத் தவறினால், அந்த மனு நீங்கள் இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

M/s M.L.கணேஷ் – 885/1991
S.அருண்குமார் – 796/1991
வழக்கறிஞர்கள்,
எண்.66, Additional Law Chambers,
உயர்நீதிமன்றம், சென்னை-600 104

இடம்: சென்னை
தேதி: 21.09.2026

யூனியன் பாங்க் ஆப் இந்தியா
சொத்து மீட்பு கிளை
மின் ஏல விற்பனை அறிவிப்பு அசையா சொத்துக்களுக்கானது.
எண்.168, இரண்டாவது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை - 600 001, போன்: 9137554740
மின்னஞ்சல்: ubin0554740@unionbankofindia.bank.in

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 (விதி 8 & 9 சேர்த்து வாசிக்கவும்) பாதுகாப்பு நடைமுறை விதிகள் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை இ-ஏலம் மூலம் விற்பனை செய்தல்.

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர், யூனியன் பேங்க் ஆப் இந்தியா, அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், அடமானமாக வைக்கப்பட்டு, வங்கியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை, வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கித்தொகை, வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு மின்னணு ஏலத்தில் விடப்படுகிறது. சொத்துக்களானது “உள்ள இடத்தில் உள்ளவாறு”, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ளதெல்லாம் உள்ளவாறு” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். மேலும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்.1 : கடன்தாரர் & ஜாமீன்தாரர் பெயர்: 1) திரு. வெங்கடேசன் கங்காதரன் (முதல் விண்ணப்பதாரர்) & திருமதி. அனிதா வெங்கடேசன் (இரண்டாம் விண்ணப்பதாரர்), இருவரின் குடியிருப்பு : எண்.50/77, கோகுலம் இல்லம், பஜனை கோவில் தெரு, பாடி, சென்னை 600 050. மேலும் ஓர் முகவரி மனை எண்.15 B & 16, பிளாட் G1, தரை தளம், கண்ணகி நகர் 1வது தெரு, கொரட்டூர், சென்னை 600080, மேலும் ஓர் முகவரி மனை எண்.15 B & 16, பிளாட் 1C, முதல் தளம், கண்ணகி நகர் 1வது தெரு, கொரட்டூர், சென்னை 600080.

நிலுவை தொகை: 31.08.2026 அன்றுள்ளபடி ரூ.66,64,089.48 + மேலும் வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவீனங்கள்

அசையாச் சொத்தின் விவரங்கள்: அட்டவணை A : மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் கிராமத்தின் சர்வே எண்.1167 இல் அடங்கிய கண்ணகி நகர் முதல் தெரு, மனை எண்.15B மற்றும்16 ஆகியவற்றின் விஸ்தீரணம் 2455ச.அடி நிலம் சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில் : 24அடி சாலை; தெற்கில் : சர்வே எண்.1160 இல் உள்ள நிலம்; கிழக்கில் : மனை எண்.17; மேற்கில் : மனை எண்.15A; நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் : 42 அடி 6 அங்குலங்கள், தென் புறம் : 42 அடி 6 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 55 அடி, மேற்கு புறம் : 60 அடி 6 அங்குலங்கள். அட்டவணை B : அட்டவணை A இல் குறிப்பிட்ட நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 485ச.அடி அட்டவணை C அட்டவணை A இல் குறிப்பிட்டுள்ள முதல் தளத்தில் உள்ள ஃப்ளாட் எண்.G1 1080ச.அடி நிலத்தில் சூப்பர் கட்டிடப்பரப்பு பொதுப்பரப்பு உட்பட அதனுடன் ஒரு மூடிய கார் நிறுத்தும் இடம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹37,35,000/- டேவணித் தொகை ₹3,73,500/- ஏலஉயர்வுத்தொகை ₹50,000/- சுவாதீனம் ஆக்கபூர்வ

வ.எண்.2 கடன்தாரர் & ஜாமீன்தாரர் பெயர்: 1) திருமதி. அனிதா வெங்கடேசன் New Care Printer Solutions எண். 25, VCT சேம்பர்ஸ் ஆதியப்பன் தெரு, சென்னை 600 002 (2) திரு. பார்த்தசாரதி K, எண். 137/76, எல்லை அம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 (3) திருமதி அனிதா வெங்கடேசன் எண்.50/77, கோகுலம் இல்லம், பஜனை கோவில் தெரு, பாடி, சென்னை 600050 (4) திருமதி அனிதா வெங்கடேசன் பிளாட் எண்.15B & 16, பிளாட் G1, தரை தளம் கண்ணகி நகர் 1வது தெரு கொரட்டூர், சென்னை 600 080 (5) திருமதி அனிதா வெங்கடேசன் பிளாட் எண்.15B & 16, பிளாட் 1C, முதல் தளம் கண்ணகி நகர் 1வது தெரு கொரட்டூர், சென்னை 600 080

நிலுவை தொகை: 31.08.2026 அன்றுள்ளபடி ரூ.45,68,374.84 + மேலும் வட்டி, அபராத வட்டி மற்றும் இதர செலவீனங்கள்

அசையாச் சொத்தின் விவரங்கள்: அட்டவணை A : மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கொரட்டூர் கிராமத்தின் சர்வே எண்.1167 இல் அடங்கிய கண்ணகி நகர் முதல் தெரு, மனை எண்.15B மற்றும்16 ஆகியவற்றின் விஸ்தீரணம் 2455ச.அடி நிலம் சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில் : 24அடி சாலை; தெற்கில் : சர்வே எண்.1160 இல் உள்ள நிலம்; கிழக்கில் : மனை எண்.17; மேற்கில் : மனை எண்.15A; நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் : 42 அடி 6 அங்குலங்கள், தென் புறம் : 42 அடி 6 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 55 அடி, மேற்கு புறம் : 60 அடி 6 அங்குலங்கள். அட்டவணை B : அட்டவணை A இல் குறிப்பிட்ட நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 415ச.அடி அட்டவணை C : அட்டவணை A இல் குறிப்பிட்டுள்ள முதல் தளத்தில் உள்ள ஃப்ளாட் எண்.1C 850ச.அடி சூப்பர் கட்டிடப்பரப்பு பொதுப்பரப்பு உட்பட அதனுடன் ஒரு மூடிய கார் நிறுத்தும் இடம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹25,00,000/- டேவணித் தொகை ₹2,50,000/- ஏலஉயர்வுத்தொகை ₹50,000/- சுவாதீனம் ஆக்கபூர்வ

வங்கிக்குத் தெரிந்தவரை மேற்குறிப்பிட்ட சொத்திற்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை
இருப்பினும், ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் வில்லங்க சான்றிதழினை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்)

மின் ஏல தேதி & நேரம் : 13.10.2026 நேரம்: மதியம் 12 மணி முதல் மாலை 5 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்) மின் ஏல இணையதளம்: https://BAANKNET.COM

விருப்பமுள்ள ஏலதாரர்கள் பதிவு மற்றும் கையேடு பற்றிய https://BAANKNET.com/ என்ற இணையதளத்தை பார்க்கலாம் மற்றும் ஏதேனும் கேள்விகளுக்கு 8291220220 எண்களிலும் & மின்னஞ்சல்: support.BAANKNET@psballiance.com, கேட்டு கொள்ளலாம். மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விவரங்களுக்கு https://www.unionbankofindia.co.in/auction-property/view-auction-property.aspx மற்றும் www.unionbankofindia.co.in. என்ற வலைதளத்தில் காணலாம், ஏலம் தொடர்பான சந்தேகங்களுக்கு யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, சென்னை- சொத்து மீட்பு கிளை, எண்.168, 2வது தளம், லிங்கி செட்டி தெரு, பாரிஸ் கார்னர், சென்னை-600001, மொபைல்: 9137554740 அல்லது ubin0554740@unionbankofindia.bank.in என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி 8 & 9 இன் கீழ் நாட்கள் சட்டபூர்வமான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு.
மேற்குறிப்பிட்ட தேதியில் மின்-ஏல விற்பனை நடைபெறுவது குறித்து, பிணைய நலன் (அமலாக்க) சட்டம் 2002-இன் விதி8 இன் கீழ் இந்த அறிவிப்பானது கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை செலுத்துவதற்கான அறிவிப்பாகவும் கருதப்படும்.

தேதி : 19.09.2026,
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
யூனியன் பேங்க் ஆப் இந்தியா

equitas SMALL FINANCE BANK
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை., தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,
அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் “எங்கு உள்ளதோ அப்படியே” “எப்படி உள்ளதோ அப்படியே” மற்றும் “என்ன இருக்கிறதோ அதே நிலையில்” என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி நாகப்பன் தேவராஜ் திரு/திருமதி தேவராஜ் தேவி திரு/திருமதி சுந்தர் D திரு/திருமதி கேசவன் D அனைவரின் முகவரி: எண்: 1/119 பிரதான சாலை, காலனி தொடுகாடு, திருவள்ளூர், தமிழ்நாடு - 602105	திருவள்ளூர் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், தொடுகாடு கிராமம், திருவள்ளூர் பிரதான சாலையில் அமைந்துள்ள, பட்டா எண் 501-இன்படி கிராம நத்தம் பழைய சர்வே எண் 143/13 பகுதி மற்றும் புதிய சர்வே எண் 143/13A-இல் அடங்கிய, 3230 சதுர அடி மேற்கு பகுதியைக் கொண்ட காலி நிலம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி.	ரூ.31,01,000/- ரூ.3,10,100/- ரூ.10,000/-	27.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009048176 / 600000067213 15.05.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.14,26,455/- மேலும் 16.05.2026அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (14.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.15,58,369/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் குமார் 9940286237, சரவணன் 8680881358, பிரதாப் J 8056868756
விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 26.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.
மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

நேரடி சுவாதீன அறிவிப்பு
ICICI Bank கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிட், 4/10, மைத்ரீ டவர், பொம்மனஹள்ளி ஒசூர் பிரதான சாலை, பெங்களூரு-560068

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்படி கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI பேங்க் லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், [illegible] (DEMAND NOTICE) [illegible] 60 நாட்களுக்குள் [illegible]

[illegible] சட்டம் 13(4) [illegible] (Possession) [illegible] ICICI பேங்க் லிமிடெட்-க்குச் [illegible]

வ. எண்.	கடன்தாரர் பெயர் / கடன் கணக்கு எண்.	சொத்து விவரம் / நேரடி சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்புத் தேதி & கோரிக்கை அறிவிப்பின் படி தொகை (ரூ)	கிளையின் பெயர்
1.	[illegible] & [illegible] சபாபதி முதலி தெரு, பிளாக் C சர்வே எண் 100/21 100/18 TS எண் 42/2 ஃப்ளாட் எண் F2 பழைய எண் 18 கதவு எண் 20 21 கதவு எண் 20 21 பழைய எண் 18 1ஆவது தளம், செம்பியம் கிராமம், [illegible] முதலி தெரு, சென்னை-600011/ LBCHE00005507458, LBCHE00006010162 & LBCHE00005527813	[illegible] எண் F2, 1 ஆவது தளம், பிளாக் C, பரப்பளவு 788 சதுர அடி [illegible] 7217 சதுர அடியின் ஓர் அங்கமான 256 சதுர பிரிக்கப்படாத பங்கு. [illegible] பழைய கதவு எண் 18, புதிய கதவு எண்கள் 20 & 21, சபாபதி முதலி தெரு, செம்பியம், சென்னை-600011 [illegible] சர்வே எண்கள்: 100/21 & 100/18, பிளாக் எண் 27, TS எண் 42/2, செம்பியம் கிராமம், பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம். [illegible] 788 சதுர அடி [illegible] 7217 சதுர அடியின் ஓர் அங்கமான 256 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு. [illegible] நேரடி சுவாதீன நாள்: 18.09.2026.	18/05/2024 ரூ. 47,52,975/-	சென்னை

[illegible] 30 நாள் அறிவிப்பு [illegible] 2002-ம் ஆண்டு [illegible] விதிகள் 8 & 9-ன் கீழ் [illegible] 30 நாட்கள் [illegible]

தேதி: 23.09.2026
இடம்: சென்னை
[illegible]
ICICI பேங்க் லிட். சார்பில்